**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 01.12.2022

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலையில் வணிகம், சந்தை நுண்ணறிவு மற்றும் உற்பத்திச் சங்கிலி குறித்த குறுகிய கால பயிற்சி

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக , வேளாண் வணிகமேம்பாட்டு இயக்ககம், "வேளாண்மை வணிகம், சந்தை நுண்ணறிவு மற்றும் உற்பத்திச் சங்கிலி (பிளாக்செயின்)" என்ற தலைப்பில் பத்து நாட்கள் குறுகிய கால பயிற்சி புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக நிதியுதவியுடன் 30.11.2022 முதல் 9.12.2022 வரை நடைபெறுகிறது. இதில் கர்நாடகா, மகாராஷ்டிரா, பாண்டிச்சேரி, உத்தரபிரதேசம், தமிழ்நாடு மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், கால்நடை மருத்துவப்பல்கலைக் கழகங்கள் மற்றும் இணைக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 19 பேர் பங்கேற்றுள்ளார்கள் . தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் அமிர்தா பல்கலைக்கழக பேராசிரியர்கள் , பார்ம் அகைன் இந்தியா பிரைவேட் லிமிடெட் , எஸ்.கே.எஸ். ஸ்கில் பாஸ்ட்டெனெர்ஸ், மிஸ்ட் சொலுஷன்ஸ் போன்ற தொழில் நிறுவனங்களில் இருந்து பாட நிபுணர்களாக சுமார் 35 பேர் பயிற்சியளிக்கின்றனர்.

இப்பயிற்சியின் தொடக்க விழா வில் (30.11.2022) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுமைய இயக்குனர் முனைவர்.டி.சுரேஷ்குமார், முதல்வர் (வேளாண்மை) முனைவர் என்.வெங்கடேச பழனிச்சாமி ஆகியோர் விவசாயிகள் மற்றும் அதன் பங்குதாரர்கள் புதிய அணுகுமுறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், இந்த பயிற்சி அவசியம் என்றனர் . மேலும், இன்றைய சூழ்நிலையில் சந்தை நுண்ணறிவின் முக்கியத்துவத்தையும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க இப்பயிற்சி உதவும் என்பதையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 20 ஆண்டுகளாக சந்தை நுண்ணறிவு மற்றும் பிற வேளாண் வணிக நடவடிக்கைகளில் முன்னோடியாக திகழ்கிறது என்பதையும் அறிவித்தனர்

துணைவேந்தர் முனைவர்.வெ.கீதாலட்சுமி தமது துவக்க உரையில் , விவசாயத்தை வேளாண் வணிகமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தையும் உற்பத்திச் சங்கிலி தொழில் நுட்பத்தின் மூலம் தயாரிப்புகளை கண்டு பிடிப்பதன் முக்கியத்துவம், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் அவர்கள் விற்கும் மற்றும் வாங்கும் தயாரிப்புகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பெற உதவும் என்றும் கூறினார். விவசாயத்தில் பிளாக்செயின் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, பண்ணை விளைபொருட்களின் நம்பகத்தன்மையைப் பற்றி நுகர்வோருக்கு அதிகளவில் தெரிவிக்கும் என்பதை யும் அவர் விவரித்தார்

முன்னதாக, வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநர் முனைவர் இ.சோமசுந்தரம் வரவேற்புரையையும், பாடநெறி பயிற்சி பற்றிய அறிமுகக்குறிப்பையும் நிகழ்த்தினார். இறுதியாக, வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக பேராசிரியர் முனைவர். S. சுந்தரேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்